
# ஞானாமிர்தம்



அமரர் திரு. வே. சிவஞானம் அவர்களின்

ஞாபகார்த்தமாக

வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. வேலுப்பிள்ளை சிவஞானம்

மண்மிசை
24-01-1933

விண்மிசை
12-04-1997

திதிவெண்பா

மாதொரு பாகனாரின் வன்தொண்டர் என்னநின்று
மாதவத்தாற் பெற்றெடுத்த மன்னன் - சிவஞானம்
தாதுசேர் பங்குனியே சஷ்டிபூருவபக்கம்
நாதனடி சேர்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத் தூய்மையாளர் அமரர் சிவஞானம்

*"மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்கவேண்டாம்."*

மந்திரஞ் செபித்தல் ஆகமங்களில் மேல் நிலையில் வைத்துப் போற்றப்படுவது. ஆயின், "அதைச் செபிக்க வேண்டாம்" எனக் கூறிய காரணம் என்ன?.

மந்திரஞ் செபித்திலும் உயரிய காரியம் ஒன்று உண்டு. அது சித்திக்குமானால், மந்திரஞ் செபித்தல் தேவையற்றதாய் விடும் என்பது கருத்து.

அப்படி மந்திரஞ் செபித்தலிலும் மேலான பொருள் என்ன?

மனமது செம்மையாதல்.

மனத்துக்கண் மாசு நீங்குதல்

பொறாமை, ஆசை, சினம் என்பவற்றை மனத்தினின்றும் அகற்றி, இன்சொலனாதலே மனமது செம்மையாதல். இதுவே அறங்கள் அனைத்திலும் மேலான அறம்.

இந்த அறம், மனத்துக்கண் மாசிலனாகும் நெறி, கைவந்தவர்கள் மிகமிக அரிது.

இங்ஙனம் அரிதானவர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவருள் ஒருவர் கரவெட்டி தந்து திருநெல்வேலியில் திருவாய்த் திகழ்ந்த அமரர் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்கள்

அவர் மனந் தூய்மையானவர். வெள்ளை உள்ளம் படைத்தவர் உலக சம்பிரதாயங்கள் அனைத்தையும் நன்கு அறிந்தவராயினும், உலகியலில் ஒட்டாதவர். நீதியே அவர் நெறி; சமயம்.

அமரர் சிவஞானம் அவர்களைக் காண்பதும், அவர் கூறுமவற்றைக் கேட்பதும், அவருடன் உரையாடுவதும், அவருடன் கூடி இருப்பதும் ஆகிய எல்லாமே மனதுக்கு இதமான அமைதியை ஊட்டும் ஔஷதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர் எதைச் சொன்னாலும், அமரர் சிவஞானம் அவர்கள் தம் சிந்தையுட் கொண்டிருந்த தராசிலிட்டு, தமது மாசற்ற மனத்தில் உரைத்துப் பார்த்துத் தராதரங் கண்டு தெளியுந் தன்மை கொண்டவர்

அமரர் சிவஞானம் அவர்களின் நாளாந்த வாழ்வு புனிதமான தெய்வீகத்துடன் தொடங்கும். புலர்வதன்முன் மலர் கொய்து மாலைபுனைந்து
சிவசக்தியை வழிபடும் பேறு பெற்றவர்

அயலவர்களின் குழந்தைகளை அரவணைத்து அன்பு எனும் பிரசாதத்தை அள்ளி வழங்கியவர். பொன் இதயங்கொண்டவர்.

அவர் இன்று எம்மிடையே இல்லை என்பதை நம்பவே முடியவில்லை.

"சிவஞானம்" என்ற பெயர்கொண்ட பலர் இருக்கலாம். நாம் அறிந்த வரையில் நீதி வழுவா நெறிமுறையில் தம்மை இட்டுவாழ்ந்த சிவஞானம் எங்கள் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்களே.

அவரை இழந்து பரிதவிக்கும் அருமைத் துணைவியாருக்கும், உற்றார் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவர்தம் வேதனைகளை நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.

அமரர் சிவஞானம் அவர்கள் சூக்குமமாய் நின்று எம்மை வழிநடத்துவாராக.

- இராஜநாயகம் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையப்பா. . .

அறிவறிந்த நாள் முதலாய் - எம்மை
ஆதரவாய் அணைத்து நின்று
அன்புமழை பொழிந்து விட்ட - எங்கள்
ஆசையப்பா போனதெங்கே

கோபத்தில் கனலாகி - மறுநொடியே
கோலத்தில் குழந்தையாகி
கேளிக்கை பலகாட்டி - எம்மை
கொஞ்சிட இனி யார் வருவார்

**வேலுப்பிள்ளை பெற்றெடுத்த**
**விந்தை மிகு மைந்தனே**
விருந்தோம்பல் எனும் வார்த்தைக்கு - இனி
விளக்கம் யார் தந்திடுவார்

கள்ளமில்லா மனத்துடனே
காலமெல்லாம் வாழ்ந்தவரே
கைபிடித்த மங்கையினை
கலங்கவிட்டுப் போனதெங்கே

ஆண்டு பல போனாலும் - நம்
அழுத மனம் ஓய்ந்திடுமோ
அருகினிலே நீங்களின்றி - இந்த
அன்னை மனம் ஆறிடுமோ

*- சபேசன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தோத்திர அஷ்டகம்
## (காரிய சித்தி மாலை)

பந்தமகற்று மனந்தகுணப்
பரப்பு மெவன் பாலுதிக்குமோ
வெந்தவுலகு மெவனிடத்தி
லீண்டியிருந்து கரக்குமோ
சந்தமறை யாகமங்கலைகளனைத்தும்
எவன் பாற்றா வருமோ
வந்த விறை - யாங் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றாம் (1)

உலகம் முழுதுந் நீக்கமற
வொன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்க
ளுறாதமேலா மொளியாவ
னுலகம் புரியும்வினைப்பயனை
யூட்டுங்களைகணெவனந்த
வுலகமுதலைக் கணபதியை
யுவந்து சரண மடைகின்றாம். (2)

இடர்கண் முழுது மெவனருளா
லெரிவீழ் பஞ் சென மாயுந்
தொடருமுயிர்க ளெவனருளாற்
சுரர் வாழ்பதியு முறச் செய்யுங்
கடவுண் முத லோர்க் கூறின்றி
கரும மெவனான் முடிவுறுமத்
தடவுமருப்புக் கணபதி பொற்
சரணம் சரண மடைகின்றாம். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்க்
கங்கை முதலான
தீர்த்தமாகி யறிந்தறியாத்
திறத்தினா னு முயிர்க்கு நல
மார்த்தி நாளு மறியாமை
யகற்றியறிவிப் பானெவனப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றாம். (4)

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படுமப் பொருள்யாவ
னையமின்றி யுளதாகு
மந்தக் கருமப் பயன்யாவ
னுய்யும் வினையின் பயன் வினைவி
னூட்டி விடுப்பா னெவனந்தப்
பொய்யிலிறையைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றாம். (5)

வே தமளந்து மறிவரிய
விகிர்தன்யாவன் விழுத்தகைய
வேதமுடிவி னடனவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்குந்
நாத னெவனெண் குணனெவனப்
போதமுதலைக் குணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றாம். (6)

மண்ணினோரைங் குணமாகி
வதிவா னெவனீ ரிடை நான்காய்
நண்ணி யமர்வா னெவன்றீயின்
மூன்றாய் நவில்வா னெவன் வளியி
லெண்ணு மிரண்டு குணமாகி
யியை வா னெவன் வானிடை யொன்றா
மண்ணலெ வனக் கணபதியை
யன் பிற்சரண மடைகின்றாம். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவசறிவிற் பசுவறிவிற்
 பற்றற்கரிய பரன்யாவன்
பாசவறிவும் பசுவறிவும்
 பயிலப் பணிக்கு மரன் யாவன்
பாசவறிவும் பசுவறிவும்
 பாற்றி மேலா மறிவான
தேசனெவனக் கணபதியைத்
 திகழச் சரணமடைகின்றாம். (8)

இந்த நமது தோத்திரத்தை
 யாவன் மூன்றுதி னமும்மைச்
சந்திகளிற் றோத்திரஞ் செய்யினுஞ்
 சகல கருமஞ் சித்திபெறுஞ்
சிந்தை மகிழச் சுகம் பெறுமெண்
 டின் முச்சரிகின் சதுர்த்தியிடைப்
பந்தமகலும் மோரெண்காற்
 படிக்கிலட்ட சித்தியுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## பழமுதிர்சோலை கதிரோன்

### ஆறாவது கவசம்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வுமாய் பழமுதிர்சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென்று நுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங் (கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்டே புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பதுன்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
அறுமுகத்துடன் அவதாரித் தோனே
சிங்க முகாசூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்களோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங் (கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குரு தேசிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்தகேயா என்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக் (கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக் (கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிட்டராய்க காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(ஆறாவது கவசம் முற்றுப் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாஷித் தருள்வாய்.

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு


அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவ கேண்மையாய் இரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவத் கீதை.

பகவத்கீதையை பகவான் பகர்ந்தது பார்த்தனுக்காய் மட்டுமல்ல படித்தாரும், பாமரரும் ஏன் பாரில் உள்ளார் எல்லாம் பயன்பெறுவதற்காய். இன்ப துன்பங்களினதும், இம்மையினதும் உண்மையை உள்ளக்கண்கொண்டு கருத்தூன்றி ஆய்ந்து, கவலைகளை களைந்து இன்பக்கடலில் திளைத்து இவைதம் உண்மை நிலை உணர்ந்து இவ்வையத்து பிறந்துள்ள ஆன்மாக்கள் எல்லாம் பதியின் பாதக் கமலங்களை அடைவதற்காய்.

பகவத்கீதை தன்கண்ணே கொண்டே பதினெண் அத்தியாயங்களுள் ஆத்மீக கருத்துக்களை மட்டுமல்ல, உலோகாயத் தத்துவங்களையும் தருகின்றது. உண்டி முதல் உறக்கம் வரை, பந்த பாசங்கள் முதல் படை கொண்டு புரியும் யுத்ததர்மம் வரை நித்திய கர்மம் முதல் சத்திய கர்மம் வரை, வர்ண ஆச்சிரம தர்மம் முதல் சமத்துவ கொள்கை வரை விளக்குகின்றது.

இது இந்து மதம் தந்த உலகின் முதல் வாழ்க்கை ஆலோசனை (Counselling) நூல் எனின் மிகையாகாது. கீதையினை சற்று நின்று, ஊன்றி உற்று நோக்கின் கலங்கி நிற்கின்ற பார்த்திபனுக்கு, அவற்றை தெளிந்து விளக்கும் பார்த்தசாரதிக்கும் இடையே நிகழும் உரையாடலாகவே அமைகின்றது. உலகியலில் உழலும் நம் உள்ளத்து மாற்றங்களுக்கும், ஐயங்களுக்கும், கலக்கங்களுக்கும் விடை பகர்வதாய் திகழ்கின்றது.

பகவத்கீதையின் பதினெண் அத்தியாயங்களுள், ஒரு பொழுது தெளிந்து, ஒரு பொழுது அவாவி, ஒரு பொழுது மயங்கி நிற்கும் நம் மனத்தின் மாற்றங்களை, நம் குணத்தில் ஏற்படும் கோபம், தாபம், கலக்கம் முதலிய வேறுபாடுகளை விளக்கி, இவையெல்லாம் மாயைப் பற்றியுள்ளதாலே ஆன்மா பெறுகின்ற குணவியல்புகள் என தெளிவுபடுத்துகின்றது பதினான்காம் அத்தியாயமான குணத்ரய விபாகயோகம். இதன் ஒரு பகுதியை சற்று விரிவு படுத்தி வேண்டும் விளக்கங்கள் சேர்த்து, சுவாமி சித்பவானந்தா, பாரதியார், கண்ணதாசன் ஆகியோரின் உரைகளை தழுவி இங்கு தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குணத்ரய விபாகயோகத்திலிருந்து...

தேக சம்பந்தமே, அதாவது உடலோடு கூடியமையே ஆத்மாவின் சுக துக்கங்களுக்கும் கோபதாபங்களுக்கும் காரணம் என்பது இதில் விளக்கப்படுகின்றது. உலகத்தைப் படைக்க எண்ணங் கொண்ட கடவுள் முதலில் ஆன்மா அனுபவங்களைப்பெற கருவியாய் இருக்கின்ற பிரகிருதியையும் (மாயை) ஜீவனையும் சேர்க்கிறார் பிறகு பிரகிருதி ஆத்மாவின் மும்மை காமத்துக்கு ஏற்ப தேவ மனித பசு, பஹி ரூபங்களைப் பெற்று சத்வ ரஜஸ், தமோ குணங்களால் ஆத்மாவைப் பிணிக்கிறது.

அவற்றுள்

சத்வம் : மனிதனுக்கு ஞானவொளியையும், நன்மார்க்கத்தில் விருப்பத்தையும் அளிக்கிறது.

ரஜஸ் : அவா, பற்றுதல் முதலிய குணங்களையளித்து கர்மங்களில் தூண்டுகின்றது.

தமஸ் : மயக்கம், சோம்பல், உறக்கம் முதலியவற்றை அளிக்கின்றது.

இம் மூன்று குணங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயங்களில் தலையெடுத்து நிற்கும். அப்போது மனிதனுக்கு அதற்கேற்ற குணங்கள் உதிக்கின்றன. உதாரணமாக அதிகாலைப் பொழுதில் சத்வ குணமும், மதியப் பொழுதில் இரஜோ குணமும் இரவில் தமோ குணமும் தலை எடுத்து நிற்கின்றன. எனவே தான் அதிகாலைப் பொழுதை கல்வி முயற்சிகளுக்கும், தியானம் முதலியவற்றிற்கும் உரிய பொழுதாகக் கொள்வர். இரவை நித்திரைக்குரிய பொழுதாக்கினர் பகல் முயற்சிக்குரிய பொழுதாகியது.

இனி கீதைக்கு வருவோம்.

ஸ்ரீ பகவான் சொல்கிறார்.

***ஞானங்களனைத்திலும் மேலான பரம ஞானத்தை உனக்கு மீண்டும் உரைக்கிறேன். இதனை அறிந்து, மோகம் தவிர்த்த முனிவர்களெல்லாம், அந்த அறிவையே அடிப்படையாக்கி வாழ்க்கையின் முடிவில் நற்கதி அடைந்தனர். (1)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :** பரம ஞானத்தை அடைந்தவர்கள் அடைய வேண்டியது ஒன்றுமில்லை. மனது பரிபக்குவம் அடைந்தவர்களுக்கு ஞான சாதனம் மிக எளியது எனினும, பக்குவம் அடையாதவர்களுக்கு அது மிகக் கடினமானது. ஞான பாராயணர்களாய் இருந்தவர்கள் முனிவர்கள் எனப்பட்டனர். பிரம்ம ஞானத்தை அடைந்தவர்கள் நிறைநிலை எய்துகின்றனர் எனினும் அவர்களது உடல் வாழ்க்கை குற்றமுடையது போலத் தோன்றுகின்றது. உடலின் குற்றத்தை புருடனது (உடலோடு கூடிய ஆன்மா) குற்றம் என மயங்கலாகாது. உடலத்தை நீங்கிய பின் முனிவர் பரிபூரணமடைகின்றனர்.

***இந்த ஞானத்தை அடைந்து அதனால் என்னியல்பு பெற்றோர் படைப்புக் காலத்தில் பிறவார் ஊழியிலும் சாகமாட்டார். (2)***

**விளக்கக் குறிப்பு :** கடலைச்சேர்ந்த உப்புக் கல் கடலில் தன் உருவத்தை இழக்கின்றது. அதே வேளை கடலின் சொரூபத்தைப் பெறுகின்றது. ஞானியின் நிலையும் அத்தகையைதே பிரம்ம சொரூபத்தில் ஒன்றான பின்னர், பிரகிருதி (மாயையின்) காரணமாக உருவாகும் தோற்றம், ஒடுக்கம் எல்லாம் கடந்திருப்பதால். அதை அடைக்கின்றவனுக்குப் பிறப்பு, இறப்பு, பிணி முதலியன கிடையா வேக வைத்த நெல்லைப் பூமியில் போட்டால் அது முளையாது. ஆனால் வேகாத நெல்லோ முளைத்து மீண்டும் நெல்தரும். இங்ஙனம் வேகும் வரை முளைத்துக் கொண்டே இருக்கும் இது போல பிரமஞானம் (பரம ஞானம்) அடைந்தவன் இறப்பானானால் மறு பிறப்பொய்யான். ஆனால் அடையாதவனோ பிரம்மஞானம் அடையும் வரை பிறப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெரிய பிரகிருதியே எனது கர்ப்பப்பை; அதில் நான் கருத்தரிக்கிறேன். அதாவது விதையை விதைக்கிறேன்; எல்லா உயிர்களும் அதிலிருந்து தான் பிறக்கின்றன.* (3)

**விளக்கக் குறிப்பு :** மாயையே முதற்காரணம்; இறைவன் நிமித்த காரணம்; இது பானை வனைவதற்கு மண் முதற்காரணம்; வனைவோன், நிமித்த காரணம் என்பதைப் போன்றது. இம்மாயையே உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் முதற்காரணமாகி, இறைவனால் ஆத்மாவோடு இணைக்கப்பட்டு பூமியில் விடப்படுகின்றது ஆன்மா விதையாக, மாயை மண்போல விதை முளைக்க உதவுவதால் கர்ப்பப்பை எனப்பட்டது.

*எந்தக் கர்ப்பப்பையில் எத்தனை விதமான வடிவங்கள் படைக்கப்பட்டாலும் அவற்றுக்கெல்லாம் பிரகிருதி தாய்; நான் விதையைத் தூவி விளைச்சலை உண்டாக்கும் தந்தை.* (4)

**விளக்கக் குறிப்பு :** ஒரு குழந்தை தோன்ற ஆண்பாலும், பெண்பாலும் சேர்தல் அவசியம். அதுபோல மாயையே எல்லாவற்றிற்கும் தாய்; தந்தையைப்போல் இருப்பது பரப்பிரம்மம். உயிர்கள் வெவ்வேறு வடிவங்களில் படைக்கப்பட்டலும் ஒரே கர்ப்பப்பையில் அதாவது மாயையில் இருந்தே தோன்றுகின்றன.

*சத்துவம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களும் பிரகிருதியில் இருந்து எழுவன. இவையே உடம்பினுடன் அழிவற்ற ஆத்மாவைப் பிணிக்கின்றன.* (5)

**விளக்கக் குறிப்பு :** பிரகிருதி (மாயை) முக்குண மயமாயிருக்கின்றது. அக்கினியும் அதன் உஷ்ணமும் வேறானவைகளல்ல; ஒன்றே. அதுபோல் பிரகிருதியும் குணமும் ஒன்றே. உலகில் உள்ள நிறங்கள் எல்லாவற்றையும் தொகுத்து மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்களாக்கலாம்.

அதே போல் பிரகிருதி முழுவதும் முக்குணங்களில் அடங்கி இருக்கிறது. முக்குணங்கள் என்பதும் பிரகிருதி என்பதும் சொருபத்தில் ஒன்றேயாம்.

நீர் அசைவதால் நீரில் உள்ள சூரியவிம்பம் அசைகின்றது. சூரியனே அசைவதுபோல் விம்பத்தில் இருந்து தெரிகின்றது. உண்மையில் சூரியன் அசைவதில்லை. அதுபோல அக்ஞானத்தால் பிணிக்கப்படாத ஆன்மா பிணிக்கப்பட்டது போல் தோன்றுகின்றது.

***அவற்றுள் சத்துவம் நிர்மலத் தன்மையால் ஒளி கொண்டது, நோவற்றது. அது இன்பத்திலும், ஞானத்திலும் பற்றுதலை உண்டாக்கி ஆத்மாவை கட்டி இழுக்கின்றது.*** ***(6)***

**விளக்கக் குறிப்பு** : தூய கண்ணாடிக்கு சத்துவ குணத்தை ஒப்பிடலாம். அழுக்குப்படியாததும், ஸ்படிகம் போன்று அமைந்ததுமான கண்ணாடியின் வாயிலாக வெளிச்சம் நன்கு வெளியாகும். அதனூடு பார்க்கும் போது காட்சி இடர்ப்படுவதில்லை. பொருட்களை உள்ளபடி விளக்குகின்றது. இங்ஙனம் உள்ளபடி அறிவது ஞானம் புறப்பொருட்களைப் பார்த்தறியும் போது அது தரும் இன்பத்தில் நாட்டம் வருகின்றது.

சுகத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற வாறு பற்றுதல் உண்டாகின்றது. இன்னும் அதிக சுகத்தை புறப்பொருட்கள் எங்ஙனம் தரும் என்ற ஆராய்ச்சி ஞானப்பற்றை மேலும் கூட்டுகின்றது. புற உலகத்தைப் பற்றிய ஞானமும் அதனிடத்திருந்து வருகின்ற சுகமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகளாகின்றன. மற்றெல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தங்களையும் விட ஸத்துவகுணம் உண்டுபண்ணும் பந்தம் மிக வலிமையானது. ஏனெனில் ஆத்மானந்தத்திற்கு இணையான சுகத்தை அது கொடுக்கின்றது.

***ராஜோகுணம் விருப்ப இயல்புடையது அவாவின் சேர்க்கையால் பிறப்பது அது ஆத்மாவை தொழில் சேர்க்கையால் கட்டுகிறது. (7)***

**விளக்கக் குறிப்பு :** ரஜோகுணம் ஆசை வடிவெடுத்து முடிவில்லாத பிறப்பை உண்டு பண்ணுகின்றது. காவிக்கல் வெள்ளை வஸ்திரத்திற்கு சிவப்பு நிறம் தருவது போல் ரஜோகுணம் ஆன்மாவுக்கு தொழிலைக் கொடுக்கின்றது.

திருஷ்ணா அல்லது வேட்கை என்பது அடையாத பொருளின் மீது அடைய வேண்டும் என்று கொண்டுள்ள விருப்பம்.

ஆஸங்கம் அல்லது பற்றுதல் என்பது பெற்றுள்ள பொருளை விட்டுப் பிரியலாகாது என்ற மனப் பான்மை தோற்றத்திலுள்ள இவ்வுலகப் பொருட்களின் மீது பற்றும், தோன்றாது உள்ள மறுமையில் வேட்கையும் ரஜோகுணத்தால் ஆத்மாவுக்கு வருவன. எரிகின்ற விறகு தீயை வளர்ப்பது போல ரஜோகுணம் விளைப்பற்றை வளர்க்கிறது. ரஜோகுணம் இருக்கும் வரை கர்மத்தில் (செயல்களில்) பற்றும், தன்னைக் கர்த்தா (செயல் புரிபவன் ) என்று எண்ணுகின்ற எண்ணமும் ஆத்மாவுக்குண்டு

***தமோ குணம் அஞ்ஞானத்தால் பிறப்பது. இதுவே எல்லா ஜீவர்களையும் மயங்கச் செய்வது. தவறுதலாலும், சோம்பலாலும் உறக்கத்தாலும் அது கட்டுப்படுத்துகின்றது. (8)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு** : தமோ குணம் விவேகத்தை மறைக்கும் தன்மை உடையது. இது சத்வம், ரஜோ குணங்களிரண்டையும் கெடுக்கின்றது. அதனால் அறிவற்று, உணர்ச்சியற்று செயலற்று மனிதன் ஜடம் போன்று ஆகிவிடுகிறான்.

***சத்வம் இன்பத்திலே பற்றுதல் விளைவிக்கிறது. ரஜோ குணம் செய்கையில் பற்றுறுத்துகிறது. தமோ குணம் ஞானத்தை சூழ்ந்து ஜீவனை மயக்கத்தில் பிணிக்கிறது.*** *(9)*

**விளக்கக் குறிப்பு** : ஒரு மனிதன் எதில் பற்று வைக்கிறானோ அதிலிருந்து அவனிடத்து எக்குணம் தலையெடுத்திருக்கின்றது என்பது விளங்கும். விதவிமான இன்பங்களை அனுபவிக்க விளைபவனிடத்து சத்துவ குணமும், பலவித அலுவல்களில் ஈடுபட ஆசைப்படுபவனித்து ரஜோ குணமும் ஓங்கி நிற்கின்றன.

மேகம் சூரினை மறைத்து நிற்பது போல தமோ குணம் ஞானத்தை மறைத்து நிற்பதால், தனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை செய்யாது விட்டு விடுதலால் தமோகுண விருத்தி உடையவனுக்கு கவலையொன்றும் உண்டாவதில்லை. காலத்தை வீணாக கழிப்பது, பொருளை விரயமாக்குவது குறித்து அவன் வருந்துவதில்லை.

***சிலவேளை ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் அடக்கி சத்துவம் இயல்கிறது. சிலவேளை சத்துவத்தையம், தமோ குணத்தையும் அடக்கி ரஜோ குணம் நிற்கிறது. அங்ஙனமே சத்துவத்தையும், ரஜோ குணத்தையும் அடக்கி தமஸ் மிஞ்சுகிறது.*** *(10)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு** :- தேகம் எடுத்துள்ள ஒருவனிடத்து மூன்று குணங்களும் இருக்கின்றன. ஒரு குணம் முன்னணிக்கு வரும்போது மற்ற இரணடும் பின்னணிக்கு போய்விடுகின்றன. விழித்திருந்து அமைதியே வடிவெடுத்தவனாக மனிதன் ஆகும் போது சத்துவ குணம் ஓங்கிநிற்கின்றது. அப்போது இன்பமும் ஞானமும் விரிவடைகின்றன ரஜோ குணம் தலையெடுக்க பலவித கர்மங்களில் ஈடுபடுகின்றான். தமோ குணம் தலையெடுக்க சோம்பலும், தூக்கமும், கலக்கமும் வருகின்றன. நாள் தோறும் இம் மூன்று குணங்களும் மாறிமாறி முன்னணிக்கு வருகின்றன. இது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது.

***இந்த உடம்பில் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்குமாயின், அப்போது சத்துவ குணம் வளர்ச்சி பெற்றது என அறியக்கடவாய்.***

***(11)***

**விளக்கக் குறிப்பு** : பல வர்ணங்கள் தீட்டிய கண்ணாடிகள் அமைக்கப் பெற்றுள்ளன பெட்டி ஒன்றனுள் தீபம் வைத்தால் எல்லாக் கண்ணாடிகள் வாயிலாகவும் அதன் வெளிச்சம் வெளியாகும். தீபத்தின் பிரகாசத்திற்கு ஏற்ப வெளிச்சமும் அதிகரிக்கும். மனித உடல் அத்தகைய பெட்டி போன்றது. கண்,காது, மூக்கு,வாய், மெய், ஆகிய இந்திரியங்கள் வாயில்களாகின்றன. குண வேறுபாட்டுக்கு ஏற்ப ஆத்ம பிரகாசம் இந்திரியங்கள் வாயிலாக ஒளிர்கிறது.

சத்துவகுணம் ஓங்குமிடத்து ஆத்மப் பிரகாசம் நன்கு மிளிர்கிறது. பார்ப்பதில் கேட்பதில் ஒவ்வொரு இந்திரியத்தையும் (கருவிகள் - மெய் வாய், கண், மூக்கு, செவி) கையாள்வதில் எழிலும், தெளிவும் திகழ்கின்றன. இந்நிலையில் மெய்யறிவு ஓங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவா, முயற்சி, தொழிலெடுப்பு, அமைதியின்மை, விருப்பம் இவை ரஜோ குணம் மிகுதிப்படுவதிலிருந்து தோன்றுகின்றன.* *(12)*

**விளக்கக் குறிப்பு :** பிறர் பொருட்களை எல்லாம் தன்னுடையவை ஆக்கிக் கொள்ள விரும்புதல் பேராசை அல்லது லோபம் இந்திரியங்கள் வாயிலாக வெளியுலக விவகாரங்களில் முனைந்து போதல் முயற்சி அல்லது பிரவிருத்தி அப்படிச் செய்வதால் புதிய, புதிய கர்மங்களைத் துவக்குவதில் ஊக்கம் (தொழிலெடுப்பு) உண்டாகிறது. இங்ஙனம் துவக்கிய கருமங்களில் வெற்றியுடையும்போது மகிழ்வும், தோல்வி அடையும் போது மனச் சோர்வும் உண்டாகி அமைதியின்மையை வருவிக்கும். தொடுத்த கருமங்களை செப்பனிட விருப்பம் ஏற்படுவதால் வினை வேட்கை அல்லது தொழில் தாகம் அதிகரிக்கும். இவை ரஜோ குணத்தில் அறிகுறிகள்.

*ஒளியின்மை, முயற்சியின்மை, தவறுதல், மயக்கம். இவை தமோ குணம் ஓங்குபிடத்தே பிறப்பன.* *(13)*

**விளக்கக் குறிப்பு :** தமோ குணத்தின் ஆதிக்கத்தால் மனத்தகத்து இருள் சூழ்கிறது. அதனால் விவேகம் செய்யாது மறைந்துபட்டுப் போகின்றது. ஒரு செயலையும் சோம்பித்திரியும் தன்மை தலையெடுக்கின்றது. அஜாக்கிரதையே வடிவெடுத்தவனாக மனிதன் மாறியமைகிறபடியால் அவன் தவறுதல் செய்ய இடம் ஏற்படுகின்றது. மதியமயக்கம் அல்லது திரிவுபட்ட அறிவும் அதன் பயனாக வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சத்துவம் ஓங்கி நிற்கையிலே சரீரி இறப்பானாயின் மாசற்றவனாகி உத்தம ஞானிகளின் உலகங்களை அடைகிறான்* (14)

**விளக்கக் குறிப்பு :** உடலை விடும்போது உள்ளத்தில் என்ன எண்ணம் நிலைத்திருக்கிறதோ அதற்கு ஏற்ப மறுபிறப்பு அமைகின்றது. சத்துவ குணத்தில் இருக்கும் போது தெய்வீக சிந்தனையில் இருப்பது உறுதி. பிரம்மலோகம் முதலிய இடங்களில் சத்துவ குணமே நிறைந்திருப்பதால் அம்மனிதன் அந்த லோகத்தை அடைகிறான். ஆனால் இந்த ஞானம் இன்னும் பரஞானம் ஆகவில்லை.

*ரஜோ குணத்தில் இறப்போன் கர்மப்பற்றுடையோரிடையே பிறக்கிறான். அவ்வாறே தமசில் இறப்போன் மூட கர்ப்பங்களில் தோன்றுகிறான்.* (15)

**விளக்கக் குறிப்பு :** ரஜோகுணத்தில் இறப்போன் பதைபதைப்போடும், பேராவலோடும் துன்பத்தோடும் உயிர் வாழ்கிறான். இடையறாது கர்மம் செய்யும் பாங்குடையவனாக அவன் பிறக்கிறான் தமோகுணத்தில் தேகத்தை விடுபவன் பிரக்ஞையின்றி ஜடநிலையில் சாகிறான். அவன் மிருகமாக அல்லது அறிவிலியாகப் பிறக்கிறான்.

*சத்துவ இயல்புடைய நிர்மலத் தன்மையே நற்செய்கையின் பயன் என்பர். ரஜோ குணத்தின் பயன் துன்பம்; தமோ குணத்தின் பயன் அறிவின்மை.* (16)

**விளக்கக் குறிப்பு :** தமோ குணத்திலிருந்து தொழிலின்மையும், தீவினையும் தோன்றும். அதனால் மனிதனுக்கு முன்னேற்றம் இல்லை. ஆழ்ந்து செயலில் ஈடுபடும்போது, அது துன்பத்தை விளைவிக்கும் ஆனால் துன்பம் வேண்டப்படாததல்ல. துன்பப்படுபவனே தன்னைத் திருத்தியமைகிறான். மனிதனுடைய முன்னேற்றத்திற்கு துன்பம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுவது போல் வேறு எதுவும் பயன்படுவதில்லை துயரத்தால் தன்னைத் தூயவனாக்குகிறவன் நன்செயலுக்கு வருகிறான். அப்போது தர்மம் அவன்மூலம் திகழ்கிறது. அதனால் அவன் சத்துவ குணம் எய்துகிறான். தூயவன் ஆகிறான்.

***சத்துவத்திலிருந்து ஞானம் பிறக்கின்றது. ரஜோ குணத்தினின்றும் அவர் தமோ குணத்திலிருந்து தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் தோன்றுகின்றது.*** ***(17)***

**விளக்கக் குறிப்பு** : இதனால் மனிதன் படிப்படியாக கீழான குணங்களில் இருந்து மேலான குணங்களுக்கு போக ஓயாது முயல வேண்டும் என காட்டப்பட்டது.

***சத்துவ குணத்தில் நிற்போர் மேலேறுகின்றார்கள். ரஜோ குணமுடையோர் இடையே நிற்கின்றனர். தாமஸர் மிகவும் இழிய குணங்களும் செயலும் உடையோராய் கீழே செல்வர்.*** ***(18)***

**விளக்கக் குறிப்பு** : ஜீவர்கள் மேலான அல்லது கீழான பிறப்பெடுப்பதற்கும் குண வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சத்துவ குணம் ஓங்கப் பெற்ற ஒருவன் தெய்வப் பிறப்பும், விவேகம், வைராக்கியம் வாய்க்கப்பெற்ற மானுடப் பிறப்பும் எடுக்கிறான். அவற்றின் வாயிலாக படிப்படியாக அவன் பரம ஞானத்தை நோக்கிச் செல்கிறான்.

ரஜோ குணமுடையவன் கர்மங்கள் பல செய்கிறான் எனினும் விவேகமின்மையால் முன்னேற்ற மடைவதில்லை. பிற்போக்கில் போவதும் இல்லை. தனக்கு விவேகம், வரும் வரை அவன் நெடுங்காலம் வினையாற்றுவதிலேயே கருத்துடையவனாயிருக்கிறான். ஆனால் தமோ குணத்தில் ஆழ்ந்தவனோ படிப்படியாக கீழ்மையையே அடைகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நம்மையும் நாட்டையும் மேம்படுத்த
# சுவாமி விவேகானந்தர்
### கூறும் அறிவுரைகள் சில....

1) உடல் பலவீனத்தையோ, மனப்பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் நீங்கள் அணுகக்கூடாது என்பதே நான் உங்களுக்கும் போதிக்க விரும்பும் முதன்மையான உபதேசம் ஆகும்.

2) உன்னிடத்தில் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள். பிறகு அந்த நம்பிக்கையை நாட்டிற்கு வழங்கு.

3) உங்களில் ஒவ்வொருவரும் பேராற்றல் படைத்தவராக வேண்டும். இது நிச்சயம் முடியும் என்றே நான் கூறுகிறேன்.

4) நாம் எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள்; எதையும் செய்யக்கூடிய ஆற்றல் நமக்கு உண்டு.

5) மிகப்பெரிய உண்மை இது-வலிமை தான் வாழ்வு, பலவீனமே மரணம். வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்ககை, நிரந்தரமான வளவாழ்வு, அமரத்துவம் ஆகும். பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. பலவீனம் மரணமேதான்!

6) வலிமை, அளவற்ற வலிமை - இதுவே நமக்கு இப்போது தேவை என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

7) நீ எதை நினைக்கிறயோ அதுவாகவே நீ ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் நீ பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமை படைத்தவன் என்று நினைத்தால் நீ வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) நீ உன்னைப் பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே. எழுந்து நில் தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்துகொள். உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை அறிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

9) தைரியமான சொற்கள், மிகவும் தைரியம் நிறைந்த செயல்கள், வீரர்களாக்கும் கொள்கைகள் இவையே நமக்கு இப்போது வேண்டும்.

10) எதுவும் வரட்டும். உலகம் இருந்தாலும் சரி, அழிந்துவிட்டாலும் சரி நான் எனது கடமையை மறக்கமாட்டேன். இவை பெருவீரனின் வார்த்தைகள்.

தைரியசாலியால் மட்டுமே நேர்மையாக நடக்க முடியும் சிங்கத்தையும் நரியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். வேற்றுமை தெரியும்.

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். காலமெல்லாம் அழுது கொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

13) சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள். எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போராடு. எண்ணத்தில் ஏற்படும் தீமைகள், செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத் தீமைகளோடும் போராட்டுக்கொண்டே இரு. இப்படி எதிர்ப்பதில் வெற்றி பெற்ற பிறகுதான் அமைதி உன்னைத் தேடிவரும்.

14) இன்னல், அறியாமை, அச்சம் முதலியன நம்மை விட்டு ஓட வேண்டுமானால் அவற்றை எதிர்த்து நாம் போராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை இப்பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

16) உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதன்பொருட்டும் உண்மையைத் துறக்கக்கூடாது.

17) பொறாமையையும் ஆணவத்தையும் விட்டுவிடு, பிறருக்காக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.

18) பிறரது குற்றங்களைப்பற்றி ஒரு போதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை ஆனாலும் சரி, அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை.

19) ஒரு மனிதன் குற்றம் குறைகளுடன் தாழ்வுற்று இருப்பதற்குக் காரணம், அவன் உயர்ந்த இலட்சியங்களை அறியாததுதான். அவன் தவறுகள் செய்வதற்குக் காரணமும் அதுவே தான். நல்லவற்றை அவனுக்குப் போதியுங்கள். அவன் திருந்தி நல்லவன் ஆகிவிடுவான்.

20) கல்வி எமக்கு மிகவும் அவசியமானது, கல்வி என்பது மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனை தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.

21) மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும். ஒவ்வொருவரிடமும் இருக்கும் இந்த அறிவை வெளிக்கொண்டுவர உதவுவதே ஆசிரியனுடைய வேலையாகும்.

22) என் அருமை மாணவர்களே! பல்கலைக்கழகப் படிப்பு முடிந்ததும் மக்கள் தொண்டில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். விலைமதிப்பற்ற, செல்வம் நிறைந்த பொக்கிஷமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தாலும் இந்தத் தொண்டினால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை இல்லை என்பேன்.

23) **உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். நமது பெயர்களைப் பறைசாற்றுவதல்ல.**

24) உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக்காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முக்தி பெறுவது நிச்சயம்.

25) சமயத்தை முறையாகப் பின்பற்றாமற் போனது தான் நமது சமுதாயத்தின் இப்போதைய வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன். இந்த உண்மையை நான் நமது பழைய நூல்களிலிருந்து ஆதாரம் காட்டி நிரூபித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

26) இந்துக்கள் தங்களுடைய கடந்தகால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கு ஏற்ப, அவர்களின் எதிர்காலம் மேலும் மேலும் பெருமைக்குரியதாய் அமையும். நமது சமயத்தின் மகத்தான உண்மைகளை உலகமெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்.

27) அவ்வப்போது உலகத்திடமிருந்து உங்களுக்குப் பலமான அடி கிடைக்கலாம். அதற்காக மனம் தளர்ந்து போகக் கூடாது. கணநேரத்தில் அதுசரியாகிவிடும். எல்லாமே சரியாகிப் போகும்.

28) பிறருடைய பாராட்டுக்கும், பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

29) நீ மனிதனாய் பிறந்திருக்கிறாய். நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன் பின்னால் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச் செல்

30) எழுந்திருங்கள்! விழித்துக் கொள்ளுங்கள்! இலட்சியத்தை அடையும்வரை நில்லாது உழையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குலவிளக்கு
வேலுப்பிள்ளை சிவஞானம்
அவர்களை நோயுற்ற பொழுது
கண்ணும் கருத்துமாக கவனித்த
வைத்தியர்கள், தாதிமார், மற்றும்
ஊழியர்களுக்கும் அன்னாரின்
மரணச் செய்தி கேட்டு ஓடி வந்து
எம் சோகத்தில்
பங்குபற்றியவர்களுக்கும்
தொலைபேசி மூலமும் கடித
மூலமும் அனுதாபச் செய்தி
தந்தோருக்கும் அந்தியேட்டி
கிரியைகளிலும் மதிய
போசனத்திலும் பங்கேற்றோருக்கும்
மேலும் இன்னோரன்ன உதவிகள்
செய்தோருக்கும். எங்கள் நன்றி
உரித்தாகுக.

*- குடும்பத்தினர் -*

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org